


நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (31.07.2025) தலைமைச் செயலகத்திலுள்ள சட்டத் துறை நூலகத்தில் தகவல் தேடல் மற்றும் குறிப்பு ஆதாரங்கள் அணுகுதலை எளிமையாக்கு வதற்காக ரூ.24.78 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட மின்நூலகத்தை துவக்கி வைத்தார். இந்நிகழ்வின்போது சட்டத்துறை செயலாளர் சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டக் கல்வி இயக்குநர் முனைவர் ஜெ.விஜயலட்சுமி மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் நன்றி!

### கல்லூரி ஆசிரியர் கழக பொதுச் செயலாளர் சோ. சுரேஷ் அறிக்கை!

சென்னை,ஆக.1-

தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தினரின் கோரிக்கையினை நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கழகம் நன்றி தெரிவித்துள்ளது.

இது குறித்து இக்கழகத்தின் பொதுச் செயலாளர் சோ. சுரேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் கோரிக்கையினை ஏற்று அரசு மற்றும் அரச உருவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்குப் பணி நீடிப்பு ஆணை ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டு வந்ததை, மே மாதம் வரை நீடிக்க தமிழக அரசு 12.11.2024 அன்று அரசாணை வெளியிட்டிருந்தது.

அரசு, அரசு உதவி கல்லூரி முதல்வர்கள் நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோருக்கு கல்வி ஆண்டின் இறுதி வரை பணி நீடிப்பு வழங்காமல் ஓய்வு பெறும் மாதத்திலேயே பணியிலிருந்து விலக வேண்டும் என்ற நிலை இருந்தது.

தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் அழகத்தின் கோரிக்கையினை ஏற்று தற்போது, கல்லூரி முதல்வர்கள் நூலகர்கள் உடற்கல்வி இயக்குநர்களின் பொறுப்பு மற்றும் கடமைகளை கருத்தில் கொண்டு. கல்வி ஆண்டின் இறுதி நாளான மே மாதம் 1 ஆம் தேதி வரை அவர்களுக்கு பணி நீடிப்ப ஆணை வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு பொதுச் செயலாளர் சோ. சுரேஷ் கூறியுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில் தேசிய மாணவர் படையின் (என்சிசி) தலைமை இயக்குநர் ஜெனரல், லெஃப்டினண்ட் ஜெனரல் குர்பீர்பால் சிங் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தேசிய மாணவர் படையின் துணை இயக்குநர் ஜெனரல் கமோடோர் எஸ். ராகவ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



உடல் நலக்குறைவால் மருத்துவ சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி, திருவல்லிக்கேணி பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 120 (அ) வட்டக் கழக செயலாளர் என். ரவி இல்லத்திற்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு உள்ளார்.

## இளைஞர் அணி சமூக வலைத்தள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

# தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் மேற்கொண்டார்!















கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார்.

அந்த வகையில், நேற்று,திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் சமூக வலைத்தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சி.ஆனந்த்குமார் முன்னிலையில் நேர்காணல் செய்தார்.

அவர்கள் ஆற்றிய கழகப் பணிகள் – கொண்டு வந்திருந்த மினிட் புத்தகங்கள் – சமூக வலைதளப் பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து பணி சிறக்க வாழ்த்தினார்.

# குன்னம் தொகுதி இளைஞர்களின் கோரிக்கைகள்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் உடனடியாக நிறைவேற்றினார்!

அரியலூர்,ஆக.1

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை பகுதிகளில் கடந்த மாதம் 24 ஆம் தேதி பல்வேறு மக்கள் திட்டப்பணிகளை தொடங்கி வைக்க வருகை புரிந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின் சார துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் சுற்று பயணம் மேற்கொண்டார். செந்துறை செம்படவன் குளம் மற்றும் கிராம பகுதிகளுள் உள்ள பல்வேறு குளங்களை புணரமைக்கும் பணிகளை துவக்கி வைத்துவிட்டு செந்துறையில் இருந்து அரியலூர் செல்லும் 4 வழிச்சாலையில் உள்ள கட்டையன்குடிக்காடு குடிநீர் குளத்தை சீரமைக்கும் பணிகளை தொடங்கி வைக்க சென்றார்.

அப்போது செந்துறை பெரிய ஏரியில் 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அமைச்சரின் காரை கைகாட்டினர் இதனைக் பார்த்த அமைச்சர் தமது காரை நிறுத்தி விட்டு கீழே இறங்கி வந்து இளைஞர்களிடம் பேசினார். அப்போது அந்த இளைஞர்கள் எங்களுக்கு விளையாடுவதற்கு மைதானம் இல்லை ஆகையால் தாங்கள் செந்துறை பெரிய ஏரியில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி எங்களுக்கு தற்காலிக கிரிக்கெட் மைதானம் அமைத்து தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் சா.சி.சிவசங்கர் கட்டையன்குடிக்காடு மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு திரும்பி வருகின்ற போது இளைஞர்கள் சொன்ன அந்து இடத்தை பார்த்து விட்டு கூடியவிரைவில் செய்து தருகிறேன் என்று கூறி சென்றார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வருகை தந்த அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது சொந்த செலவில் ஏரியின் உள்ள சீமை கருவேல மரங்கள் மற்றும் மேடான பகுதிகளை ஜேசிபி இயந்திரங்கள் முலம் சமன் செய்ய பணிகளை தொடங்கி வைத்து விட்டு இளைஞர்களிடம் விடைப் பெற்று சென்றார். தங்களது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிய அமைச்சருக்கு அப்பகுதி இளைஞர்கள் நன்றி தெரிவித்து புகைப்படம் எடுத்து கொண்டனர். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் வி.எழில்மாறன், பொன். செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆதி.இளங்கோவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தொழர்கள், இளைஞர்கள் உள்ளனர்.,



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (31.7.2025) திரு.வி.க. நகர் தொகுதி. பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளை துரிதபடுத்தும் வகையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ். மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக் மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கும் இடம்!

### அமைச்சர் அர.சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு! எம்.எல்.ஏ.க்கள் ஒய்.பிரகாஷ் –தே.மதியழகன் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஆக. 1 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்டச் செயலாளர்கள் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், தளி, சூளகிரி மற்றும் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.13 கோடியே 49 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்பில் புதிய வளர்ச்சி திட்ட பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பேருந்து நிலையத்தில், 2 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு மற்றும் தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் விடியல் பயண பேருந்துகளுக்குப் பதிலாக, புதிய 8 மகளிர் விடியல் பயண பேருந்து சேவைகளை துவக்கி வைத்து, அந்திவாடி விளையாட்டு மைதானம் அருகில், முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை ஆய்வு செய்து, தளி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.7 கோடியே 56 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பிலும், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், காமன்தொட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் ரூ.2 கோடியே 10 இலட்சம் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகள் துவக்கி வைத்து, பல்நோக்கு கட்டிடம், சின்னார் கிராமத்தில், மூன்றாவது புதிய பகுதிநேர நியாய விலைக் கடை ஆகியவற்றை திறந்து வைத்து, வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.3 கோடியே 82 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், தளி சட்டமன்ற உறுப்பினர் டி. ராமச்சந்திரன் ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது: –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் என அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றும் விதமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அதேப்போல பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் சரியான நேரத்திற்கு செல்லும் வகையில் பேருந்துகள் வழித்தடம் நீடிப்பு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குப் பேருந்து வசதி அளிப்பதற்காக, ஓசூர் முதல் நந்திமங்கலம் செல்லும் பேருந்தினை மாவத்தூர் வரையும், ஓசூர் முதல் தேன்கனிக்கோட்டை செல்லும் பேருந்தினை அரசு கலை, அறிவியல் கல்லூரி வரை இரண்டு வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பிற்கான மகளிர் விடியல் பயண பேருந்து சேவைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் 2 கிராமங்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 2,426 பேர் பயனடைவார்கள். மேலும், தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் விடியல் பயண பேருந்துகளுக்குப் பதிலாக 8 புதிய பேருந்து சேவைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, தளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளான கல்லுபாளம் முதல் ராமாபுரம் வரை, நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.85 இலட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலும், தளி ஜவளகிரி சாலை முதல் பாளையம் கிராமம் வரை (வழி:கொல்லப்பள்ளி) நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.66 இலட்சத்து 18 ஆயிரம் மதிப்பிலும், பேளாளம் முதல் மாநில எல்லை வரை, முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.5 கோடியே 54 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பிலும், முதுகேரி முதல் தொட்டி வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.15 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பில் சாலை பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்றம் பாளையம் கிராமத்தில், தேசிய கிராம சுயாட்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.30 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட பணி, கொட்டாயூர் கிராமத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.13 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பில் உணவு தானிய கிடங்கு கட்டிட பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், காமன்தொட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, கனிமங்கள் மற்றும் குவாரிகள் திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 10 இலட்சம் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்து, காமன்தொட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கனிமங்கள் மற்று குவாரிகள் திட்டத்தின் கீழ், ரூ.9 இலட்சத்து 9 ஆயிரம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட் பல்நோக்கு கட்டிடத்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், சின்னார் கிராமத்தில், 210 குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையில், மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குந்தாரப்பள்ளி, போலுப்பள்ளி, சின்ன பொம்மரசனப்பள்ளி, குருபரப்பள்ளி, தம்மாண்டரப்பள்ளி, மணவாரனப்பள்ளி, கட்டாயம்பீடு, பதிமடுகு மற்றும் அலேகுந்தானி ஆகிய கிராமங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக, ரூ.3 கோடியே 82 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், தார் சாலை மேம்பாட்டு பணிகள் மற்றும் கிராம ஊராட்சி செயலக கட்டடங்கள் உள்ளிட்ட புதிய வளர்ச்சி திட்ட பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமாரன், துணை செயலாளர் சின்னசாமி, ஒன்றியச் செயலாளர்கள் திவாகர், நாகேஷ், பாக்கியராஜ், ரகுநாத், கருணாகரன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா, ஓசூர் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.